DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

*******

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,

**PALLAVARAM.**

| | |
|---|---|
| CC. No. | 456/2023 |
| Prosecution: | அ.சா.6 |

| | | |
|---|---|---|
| **Deposition of witness for Name** | ~ | துரைவேல் |
| **Father Name** | ~ | கோவிந்தசாமி |
| **Village** | ~ | |
| **Taluk** | ~ | |
| **Caste** | ~ | |
| **Calling** | ~ | |
| **Religion** | ~ | |
| **Age** | ~ | |

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the day **of Dt. 25.06.2025.**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருநீர்மலை பகுதியில் வசித்து வருகிறேன். நான் தற்போது செக்யூரிட்டியாக வேலை செய்து வருகிறேன். கடந்த 18.7.2014 அன்று இரவு 9.30 மணிக்கு நான் எனது வீட்டில் இருந்த போது இடப்பிரச்சனை தொடர்பாக எதிரிகள் ராஜகோபால். ஜெயந்தி, ஸ்ரீதர். ரூபன், கண்ணதாசன் ஆகியோர் உருட்டுக்கட்டை, இரும்புக்கம்பி ஆகியவற்றுடன் வந்து எனது மகன் பிரதீப்பை அடித்தார்கள். எனது மகள் சங்கீதாவை தலைமுடியை பிடித்து இழுத்து அடித்தார்கள். பின்பு கல்லை கொண்டு எறிந்தார்கள். காயம்பட்டவர்களை சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்த்தோம். எனது மகன் அளித்த புகாரின்அடிப்படையில் போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் ஆம். போலிசார் என்னை எத்தனை வருடங்களுக்கு முன்பு விசாரணை செய்தார்கள் என்றால் 10 வருடங்களுக்கு முன்பு விசாரணை செய்தார்கள். 18.7.2014 அன்று காலையில் வளர்மதி என்பவர் என் மீதும் எனது மகன்கள் மீதும் புகார் கொடுத்த விசாரணை நடைபெற்றது என்றால் சரிதான். எதற்காக வளர்மதி புகார் கொடுத்தார் என்றால் நகை, பணம் காணாமல் போனது தொடர்பாக புகார் கொடுத்துள்ளார். எனது பூர்வீக சொத்தில் குடிசை அமைத்ததற்காக புகார் கொடுத்திருந்தார் என்றால் அது பொய்யான புகார். மேற்படி பூர்வீக இடத்தில் நாங்கள் தான் கொட்டகை அமைத்தோம்.

வளர்மதி என்பவர் புகார் கொடுத்த தினம் அன்றே இவ்வழக்கின் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அன்றைய தினம் இரவு கொடுக்கப்பட்டது. போலிசார் என்னை 2வது முறையாக விசாரணை செய்யும்போது ஏற்கனவே கொடுத்த புகார் மனுவில் சில விவரங்கள் தவறாக குறிப்பிடப்பட்டு உள்ளதாக சொல்லி உள்ளேன் என்றால் இல்லை. இவ்வழக்கில் எனக்கு காயம் ஏற்பட்டதாக நான் எவ்வித சிகிச்சையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லி உள்ளது போல் எவ்வித வழக்கு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எதிரிகள் தரப்பில் கொடுத்த புகார் மனுவிற்கு எதிராக பொய்யாக இவ்வழக்கில் புகார் மனு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

S/d xxxx

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.
S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.